*1*

# தீவிரமான கிறிஸ்தவம் ... செல்வந்தனான இளம் அதிகாரியிடத்தில் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட தேவபக்

## (மத்தேயு 19:16–22)

*மறு உருவாக்கப்பட்ட வாழ்வு என்பது உறுதிப்பாட்டின் வாழ்வாக உள்ளது ...*

நம்மில் பெரும்பான்மையானவர்கள் நம்மைக் குறிக்கப் பயன்படுத்த விரும்பாத ஏதாவது ஒரு பெயர் உரிச்சொல் இருக்கமென்றால், அது "தீவிர மான" என்பதாகவே இருக்கலாம். மதத்தைப் பற்றித் தீவிரமாக இருத்தல் என்பது, ஒரு வயதான மனிதர் கசங்கிய உடையணிந்து, வாரப்படாத தலைமுடி, தமது சட்டையில் கறைகள், அழுக்கடைந்த காலணி ஆகியவற்றுடன் ஒரு மூலையில் நின்றுகொண்டு, தனது வேதாகமத்தின் மீது கையினால் அடிகொடுத்துப் பின்வருமாறு கூக்குரல் இடுகிற ஒரு உருவகத்தைக் கற்பனை செய்வதாக உள்ளது: "மனந்திரும்புங்கள் இல்லாவிட்டால் அழிந்து போவீர்கள்!" நாம் அதுபோன்று இருக்க விரும்புவதில்லை!

ஆனால் உண்மையில், கேள்வி பின்வருமாறு உள்ளது: கர்த்தர் வேண்டிக்கொள்வது என்ன? நாம் "தீவிரமானவர்களாக" இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறாரா?

இந்தக் கேள்வியைக் கருத்து நோக்கத்தில் இடுவதற்கு, ஒரு உண்மை அனுபவத்தைப் பற்றி உங்களிடம் கூற என்னை அனுமதியுங்கள். பல ஆண்டுகளாக நாங்கள், ஒரு அயல் நாட்டில், ஒரு ஊழியக்களத்தில் ஊழியம் செய்தோம். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் அந்த ஊழியத்தை விட்டு வந்திருந்த சில காலத்திற்குப் பின்பு, அந்த சபைக்குழுமம் கூடிவரும் கட்டிடத்தில் இருந்து நான்கு மைல்கள் தூரத்தில், குறிப்பிட்ட வகையிலான "முற்றிலுமான ஒப்புக்கொடுத்தல்" என்பதை வேண்டிக்கொள்கிற ஒரு இயக்கத்தில் இருந்து அமெரிக்கப் பிரசங்கியார்கள், ஒரு சபைக்குழுமத்தைத் தொடங்கினார். இந்த இயக்கத்தில் இருந்த மக்களைத் தீவிரமானவர்கள் என்று அழைக்க முடிந்தது. வேத வாக்கியங்களின்படி சந்தேகப்படத்தக்க, குறிப்பிட்ட சில விஷயங்களை அவர்கள் போதித்து நடைமுறைப்படுத்திவந்த போதிலும், குறைந்தபட்ச

மாகக் கூறுவதென்றாலும், ஆத்துமாக்களை இரட்சிப்பதில் அவர்கள் மாபெரும் வைராக்கியம் கொண்டிருந்தனர் என்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்கின்றனர். முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தல் என்பது எதைக் கேட்கிறது என்பது பற்றிய அவர்களின் கட்டளைகளுடன் நாம் கருத்து வேறுபடலாம், ஆனால் முற்றிலு மான, தீவிரமான ஒப்புக்கொடுத்தல் என்ற கருத்துடன் நாம் கருத்து வேறுபட வேண்டுமா? மிகவும் முக்கியமாக, நமது உறுப்பினர்களிடத்தில் நாம், அதே அளவிலான முற்றிலுமான ஒப்புக்கொடுத்தலைக் கேட்பதற்கு மனவிருப்பம் இல்லாதிருக்கிறோமா?

நாங்கள் ஊழியம் செய்திருந்த சபையிலிருந்து வெகுதொலைவற்ற இடத்தில் அந்த சபைக்குழுமம் தொடங்கியபோது, அந்தக் கேள்வி என்னிடம் வந்து கேட்கப்பட்டது. நாங்கள் மனம்மாற்றியிருந்த மக்களின் பொறுப்பைக் கர்த்தரிடமாய்த் திருப்புவதற்கு நாங்கள் முயற்சி செய்திருந்தோம்: அவர்கள் சபை ஆராதனையில் கலந்து கொள்ளவேண்டும், கொடுக்க வேண்டும், விசுவாசம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும், மற்றவர்களைக் கர்த்தரிடம் வழிநடத்த வேண்டும். நாங்கள் ஓரளவுக்கு வெற்றிகரமாக இருந்தோம். எங்கள் சகோதரத்துவத்தில் பெரும்பான்மையான சபைக்குழுமங்களில் இருப்பது போலவே, சிலர் மிகவும் விசுவாசம் நிறைந்தவர்களாக, சிலர் ஓரளவுக்கு அப்படி, மற்றும் சிலர் மிக அரிதாகவே விசுவாசம் நிறைந்தவர்களாக இருக்கின்றனர்.

புதிய சபைக்குழுமம் தொடங்கியபோது, "எங்கள் உறுப்பினர்களில்" சிலர் அங்கு சென்று பார்வை இட்டனர். சிலர் அங்கு உறுப்பினராவதில்கூட ஆர்வத்தை வெளியிட்டனர். இருப்பினும், அதன் பிரசங்கியார்கள், "தங்கள் சபைக்குழுமத்தில்" சேரத்துடிக்கும் இந்த உறுப்பினர்கள் *ஒவ்வொருவரும்* ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆராதனையில் கலந்துகொள்ள வேண்டும், மற்றும் வாரத்தில் குறைந்தது இரண்டு வீட்டு வேதாகமப் படிப்பிலாவது கலந்துகொள்ள வேண்டும், மற்றும் *ஒவ்வொரு* உறுப்பினரும் ஆத்தும ஆதாயம் செய்பவராக இருக்க வேண்டும் மற்றும் சார்பளவில் குறைவான காலத்தில், யாரேனும் ஒருவரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வேண்டும் என்பதைத் தெளிவாக்கினர்.

அதன் பின்பு நடந்தது என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா? "எங்கள் உறுப்பினர்கள்" அந்த சபைக்குழுமத்தில் அங்கம் வகிக்க விரும்பவில்லை என்று முடிவுசெய்து "எங்கள்" சபைக்குழுமத்திற்குத் திரும்பிவிட்டனர், இங்கு அவர்கள் வாரத்திற்கு ஒரு முறை வரமுடிந்தது ... அல்லது வராமலேயே இருக்கவும் முடிந்தது ... இங்கு இழந்துபோகப் பட்டிருப்பவர்களுக்கு அவர்கள் எதுவும் செய்யவில்லை என்றாலும் அவர்கள் "நல்ல நிலையில்" உறுப்பினர்கள் என்று எண்ணப்பட முடிந்தது.

எங்களில், அந்த சபைக்குழுமத்திற்கு ஊழியம் செய்திருந்தவர்கள் எவ்வாறு உணர்ந்தோம் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? கலவையான உணர்வுகளைப் பற்றிப் பேசினோம்! ஒருபுறத்தில் நாங்கள், சந்தேகமான உபதேசங்கள் மற்றும் நடைமுறைகளைக் கொண்ட இந்தப் புதிய குழுவில் "எங்கள் உறுப்பினர்களை" "இழந்துபோக" வில்லை என்பதில் சந்தோஷம் அடைந்தோம். ஆனால் இன்னொருபுறத்தில் நாங்கள் பின்வருமாறு ஆச்சரியப்பட்டோம்: அந்த ஆண்டுகள் எல்லாவற்றிலும் நாங்கள் அந்த மக்களுக்குப் போதித்தது என்ன? வெதுவெதுப்பாக இருத்தல் சரியே என்று நாங்கள் அவர்களுக்குப் போதித்

*திருந்தோமா? நீங்கள் உண்மையிலேயே கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தல் இல்லாதவர்களாக இருந்தால் அதைப்பற்றிக் கிறிஸ்து கவலைப்படுவ தில்லை என்று நாங்கள் போதித்திருந்தோமா? நீங்கள் சபை ஆராதனையில் கலந்துகொள்ளுதல், தாராளமாகக் கொடுத்தல், மற்றவர்களுக்கப் போதித்தல் ஆகியவற்றை விசுவாசநிறைவுடன் செய்கிறீர்களா இல்லையா என்பது எவ்வித வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை என்று நாங்கள் போதித்திருந்தோமா? கிறிஸ்தவத்தைப் பற்றி அரைமனதுடன் இருத்தல் சரியானதே என்று நாங்கள் அவர்களுக்குப் போதிக்காது இருந்ததுண்டானால், அவர்கள் அதை எவ்வாறு கற்றுக்கொண்டனர்? தொடங்குவதற்கு நாங்கள் உதவியிருந்த, தோற்ற காலத்தில் நாங்கள் போதித்திருந்த, மற்றும் வயது வந்தகாலம் முழுவதிலும் நாங்கள் வழிநடத்தியிருந்த ஒரு சபையின் உறுப்பினர்கள் "முற்றிலுமான ஒப்புக்கொடுத்தல்" என்பது வினோதமானது மற்றும்/அல்லது வெறுப்புக்குரியது என்ற கருத்தைக் கொள்ளும் அளவுக்கு நாங்கள் ஏதேனும் தவறு செய்தோமா?*

*ஆனால், அந்த சபைக்குழுமத்தைப் பொறுத்த வரையில் எது உண்மையாக உள்ளதோ அது, ஆயிரக்கணக்கான மற்ற சபைக்குழுமங்களைப் பொறுத்த மட்டிலும்கூட உண்மையாக உள்ளது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்த சபைக்குழுமத்தைப் பற்றிய விஷயம் என்ன? ஒருவேளை, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலைவேளையில் நீங்கள் குறைந்தது, பின்வரும் அத்தியவாசியமான மூன்று விஷயங்களை "பின்பற்ற" வில்லை என்றால், நீங்கள் இந்த சபைக்குழுமத் தின் உறுப்பினராக இருக்க வேண்டும் என்று விருப்பப்படுவதில்லை என்று நாங்கள் அறிவிக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம் (அ) (அருளிரக்கத்தினால் தடைசெய்யப்படாதபட்சத்தில்) வாரத்திற்கு நான்கு முறைகள் சபைக்கு வருதல், (ஆ) தாராளமாகக் கொடுத்தல், (இ) தூய்மைமான, ஒழுக்கமான வாழ்வு வாழ்தல் மற்றும் (ஈ) பிறரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவதற்கு நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ளுதல் - அப்போது எத்தனைபேர், "போய்வருகிறோம்" என்று கூறி இன்னொரு சபையைக் கண்டறிபவர்களாக இருப்பார்கள்?*

*நீங்கள் ஒருவேளை பின்வருமாறு சிந்திக்கலாம்: "அதையே நான் செய்வேன்: நான் உங்களை விட்டுப் பிரிந்து செல்வேன் மற்றும் அதை நியாயப்படுத்துவேன், ஏனென்றால் அதைப்போன்ற சட்டங்களை இடுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை." நீங்கள் சரியானவர்களாக இருக்கலாம். ஆனால் இன்னொரு கேள்வி உள்ளது: உங்களைக் கிறிஸ்துவின் சீஷர் என்று அழைத்துக்கொள்வதற்குக் குறைந்த பட்சத் தேவையான இப்படிப்பட்ட விஷயங்களில், உங்களால் இயன்ற அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்படாத வரையில் - உங்களைக் கிறிஸ்தவர் என்று அழைத்துக்கொள்ள* நீங்கள் *உரிமை கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவுக்குத் தீவிரமாக ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்க வேண்டும் என்று கிறிஸ்து உங்களிடத்தில் கேட்கிறாரா? இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு நாம் மத்தேயு 19:16-22ல் காணப்படுகிற செல்வந்தனான இளம் அதிகாரியின் வரலாற்றை வாசித்துப் பார்ப்போமாக.*

*இந்த வரலாற்றிலிருந்து பல சத்தியங்கள் கற்றுக்கொள்ளப்பட முடியும்.*

## இந்த வரலாற்றிலிருந்து பல சத்தியங்கள் கற்றுக்கொள்ளப்படமுடியும்

இந்த மனிதரைப் பற்றி நீங்கள் பல நல்ல விஷயங்களைக் கூற முடியும்: (1) அவர் இளைஞராக இருந்தார் (மத்தேயு 19:22). (2) அவர் ஒரு அதிகாரியாக இருந்தார் (லூக்கா 18:18). (3) அவர் செல்வந்தராக இருந்தார் (மத்தேயு 19:22; லூக்கா 18:23). (4) அவர் ஒரு நல்ல மனிதராக இருந்தார்; அவரது வார்த்தையை நாம் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் - அவர் ஒரு நல்ல மனிதராக இருக்கவில்லை என்பதற்கு காரணம் எதுவுமே இல்லை - அவர் கட்டளைகளைக் கைக்கொண்டிருந்தார் (மத்தேயு 19:18-20). (5) அவர் இரட்சிக்கப்படுவதில் ஆர்வம் கொண்டிருந்தார் (மத்தேயு 19:16). (6) அவர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய தகவல்களுக்கு எங்கு செல்ல வேண்டும் என்பதை அறிந்திருந்தார்: இயேசுவே இரட்சிப்பின் ஆதாரமூலமாக இருக்கிறார். (7) அவர் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறியப் பெரும் விருப்பம் கொண்டிருந்தார், அவர் இயேசுவுக்கு முன்பாக ஓடிச்சென்று அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டார் என்று, மாற்கு நமக்குக் கூறுகிறார் (மாற்கு 10:17). (8) அவர் இயேசுவின் பண்பு மற்றும் அவரைப் பற்றிச் சில விஷயங்களை அறிந்திருந்தார், ஏனெனில் அவர் இயேசுவுக்கு முன்பாக முழந்தாள்படியிட்டு, அவரை "நல்ல போதகரே" என்று அழைத்தார் (மாற்கு 10:17). (9) அவர் இயேசுவினால் அன்புகூரப்பட்டிருந்தார் (மாற்கு 10:21).

இவையாவும் இருந்தும், அவர் இன்னமும் இரட்சிக்கப்படாதவராக இருந்தார்! நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குத் தாம் என்ன செய்யவேண்டும் என்று கேட்பதற்காக அவர் இயேசுவினிடத்திற்கு வந்தார். இயேசு பின்வருமாறு கூறவில்லை: "அதைப் பற்றிக் கவலைப்படாதே; நீ அதை ஏற்கனவே கொண்டிருக்கிறாய்." *அவரது செல்வங்கள் அவரை இரட்சிக்கவில்லை.* அந்த உண்மையானது, இயேசுவின் சீஷர்கள் உட்பட யூதர்களைத் திகைப்பில் ஆழ்த்தியிருக்கும் (மத்தேயு 19:25). அவர்களைப் பொறுத்தமட்டில், ஒரு மனிதர் செல்வந்தராக இருக்கிறார் என்ற உண்மையே அவர் நீதிமானாக இருந்தார் என்பதை அர்த்தப்படுத்திற்று. ஒரு செல்வந்தர் இழந்துபோகப்பட முடியும் என்பது அவர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ஒரு நபர், செல்வந்தராக இருத்தல் என்பது அந்த நபர் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார் என்று அர்த்தப்பட வேண்டியதில்லை. *அவரது அதிகாரமோ அல்லது கௌரவமோ கூட அவரை இரட்சிக்கவில்லை.* அவர் தமது காலத்தில் வாழ்ந்தவர்களின் பார்வையில் ஒரு மாபெரும் மனிதராக இருந்திருக்க வேண்டும், இருப்பினும் அவர் இன்னமும் இரட்சிக்கப்படாமலேயே இருந்தார். அது உங்களைப் பொறுத்தமட்டிலும்கூட உண்மையாக இருக்க முடியும். *அவரது இளம்பிராயமும் அவரை இரட்சிக்கவில்லை.* ஒரு இளம் நபர், தாம் தேவனை எவ்வாறு பிரியப்படுத்த முடியும் என்று அறிய விரும்புதல் பெரிய விஷயமாகவே உள்ளது. ஆனால் இளைஞராக இருத்தல் என்பது நீங்கள் தேவனைப் பிரியப்படுத்துவதை உத்தரவாதப்படுத்துவதில்லை.

*அவரது நற்பண்புங்கூட அவரை இரட்சிக்கவில்லை.* அவரிடம் இயேசு முதலில் பின்வருமாறு கூறினார்: "கட்டளைகளைக் கைக்கொள்." இயேசு அந்தச்

*சொற்றொடர்களில் ஏன் பதில் அளிக்கிறார்? ஏனென்றால் அந்த இளம் அதிகாரி, மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தார். அவர் எந்தப் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தாரோ, அந்தப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது அவரது முதல் அக்கறையாக இருக்க வேண்டும் என்று இயேசு சுட்டிக் காண்பித்தது நியாயமானதாகவே இருந்தது. அந்த இளம் மனிதர், "எவைகளை?" என்று கேட்டார் (மத்தேயு 19:18). அந்த மனிதர் கீழ்ப்படிந்து இருக்க வேண்டியவையான மோசேயின் நியாயப்பிரமாணத்தினுடைய கட்டளைகளின் மாதிரியை இயேசு கொடுத்தார். பின்பு அந்த இளம் மனிதர், "போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார் (மாற்கு 10:20). (பூரணமாக இல்லையென்றாலும்) உண்மையில் அவர் இவ்வாறு செய்திருந்தார் என்று அடிப்படையாக நாம் நம்ப முடியும். பின்பு அந்த மனிதர், "இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன" என்று கேட்டார் (மத்தேயு 19:20). இயேசு பின்வருமாறு பதில் அளிக்கவில்லை: "இதைக்காட்டிலும் இன்னும் அதிகமாக செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. நீ ஒரு நல்ல நபராக இருப்பதால், தேவன் உன்னை ஏற்கனவே இரட்சித்திருக்கிறார்." மாறாக இயேசு கூடுதலான அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார். அந்த மனிதர் நல்லவராக இருந்தபோதிலும், அவர் இன்னும் சிலவற்றைச் செய்யவேண்டி இருந்தது. நற்தன்மை என்பது அவரை இரட்சித்திருக்கவில்லை!*

*வாழ்வில் நமது குறிக்கோள்களாக நாம் மேற்கொள்ளும் விஷயங்கள் - செல்வங்கள், அதிகாரம், இளமை, நற்தன்மை - எதுவும் நமது இரட்சிப்பை உத்தரவாதப்படுத்துவதில்லை.*

## இயேசு ஏற்படுத்துகிற மாபெரும் வேண்டுகோள்கள் யாவும் எப்போதும் அன்பினாலேயே தரப்படுகின்றன

*இந்த நிகழ்ச்சியைப் பற்றி மாற்கு பின்வருமாறு கூருகிறார்:*

> *இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார் (மாற்கு 10:21).*

*இந்த மாபெரும் விஷயத்தை இயேசு, அன்பினாலேயே கேட்டுக்கொண்டார்; இதைச் செய்தல் என்பது அந்த இளம் மனிதருக்கு உண்மையில் மிகச்சிறந்த விஷயமாக இருந்தது. இதை இயேசு அறிந்திருந்தார், ஏனெனில் அந்த மனிதரை அவர் அன்புகூர்ந்ததால், அதைச் செய்யும்படி அவரிடத்தில் இயேசு கேட்டுக்கொண்டார். இயேசு உங்கள்மீதும்கூட அன்புகூருகிறார், எனவேதான் உங்களிடத்தில் உள்ள ஒவ்வொன்றையும் தமக்குக் கொடுக்கும்படி அவர் கேட்கிறார்!*

## பணமானது மனிதர்களைத் தேவனுடைய இராஜ்யத்திற்குப் புறம்பே வைக்க முடியும்

*பணமானது நீங்கள் இரட்சிக்கக்கூடாதபடி … நீங்கள் பரலோகத்*

*திற்குப் புறம்பே இருக்கும்படி செய்யமுடியும். சிலர், "ஓ, இல்லை," "பணம் அதைச் செய்வதில்லை, ஆனால் பணத்தை நேசிப்பது" என்று சிலர் மறுக்கின்றனர். நீங்கள் மிகவும் சரியானவராகவே இருக்கிறீர்கள்! "பணத்தைப் பறிக்கும் நமது ஆதாயப் பசியும் வெற்றியை ஆராதிக்கும் தன்மையும் கொண்ட" நமது சமூகத்தில்தான் பிரச்சனை உள்ளது, நம்மிடம் பணம் இருந்தாலும் இல்லை என்றாலும், பணத்தை நேசிப்பதில் இருந்து விலகியிருத்தல் என்பது மிகவும் கடினமானதாக உள்ளது. அந்த செல்வந்தரான இளம் அதிகாரியிடத்தில் இயேசு கேட்ட அதே விஷயங்களை, நம்மிடத்தில் அவர் கேட்பார் என்றால், நம்மில் எத்தனைபேர் அந்த இளம் அதிகாரியைப் போலவே மறுசெயல் செய்திருப்போம்? அதுவும் அதே காரணங்களுக்காக: நமது பணத்தை நாம் நேசிப்பதாலா? பணத்தை நேசித்தல் என்பது விக்கிரக ஆராதனையாகக் கூடும் என்பதை நாம் யாவரும் அறிகிறோம், மற்றும் விக்கிரக ஆராதனை என்பது சிலரை நரகத்திற்கு அனுப்பிவைக்கும்! அது உங்களுக்கும் நடக்கச் சாத்தியமுண்டா?*

## அதே விஷயத்தைக் கர்த்தர் ஒவ்வொருவரிடத்திலும் கேட்டுக்கொள்கிறார்

*இந்த இளம் மனிதரிடத்தில் இருந்த ஒவ்வொன்றையும் கர்த்தர் கேட்டது, உங்களுக்கு நியாயமானதாகக் காணப்படுகிறதா? அவர் ஏன் அதைக் கேட்டார்? "ஏனென்றால் அந்த மனிதர்மீது கர்த்தர் அன்புகூர்ந்தார்" - மற்றும் அந்த இளம்மனிதரின் இருதயத்திற்குள் கண்ணோக்கிய, இயேசு அந்த இளம் மனிதர் தேவன்மீது அன்புகூருவதைக் காட்டிலும் தமது பணத்தின் மீது அதிகம் அன்புகொண்டு இருந்ததைக் காணமுடிந்தது, அந்த மனிதரின் பணம்தான் அவனுக்கும் இரட்சிப்புக்கும் இடையில் இருந்தது. எனவேதான் இயேசு அவரிடத்தில் இதைக் கேட்டார். கேள்வி: இயேசு அதிகமானவற்றைக் கேட்கிறாரா? பதில்: இல்லை! ஏனென்றால் அவையெல்லாவற்றையும் இயேசு பதிலுக்கு அம்மனிதருக்குத் திரும்பக் கொடுத்திருப்பார்!*

*ஆனால், நாம் இயேசு எல்லாரிடத்திலும் அதைக் கேட்பதில்லையே என்று கூறத் துரிதப்படலாம்! ஓ, ஆம், அவர் கேட்கிறார்! அதன்மூலம் நான், உங்களிடத்தில் உள்ள எல்லாவற்றையும், உங்கள் வாகனம், உங்கள் வீடு முதலியவற்றையெல்லாம் நீங்கள் விற்றுவிட வேண்டும், மற்றும் வங்கியில் இருக்கும் உங்கள் பணத்தையெல்லாம் எடுத்துக் கொடுத்துவிட வேண்டும் என்று நான் அர்த்தப்படுத்துவது இல்லை. இயேசு உங்களிடத்திலும் அதே விஷயத்தைக் கேட்கிறார் என்பதில், அவர் நீங்கள் கொண்டுள்ள ஒவ்வொன்றையும் கேட்கிறார்!*

*நீங்கள் எல்லாவற்றுடனும் தேவன்மீது அன்புகூரவேண்டும் என்று அவர் கூறுகிறார் (மத்தேயு 22:37). நீங்கள் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடவேண்டும் (மத்தேயு 6:33)! நீங்கள் உங்கள் இல்லம், உங்கள் நாடு, உங்கள் பெற்றோர், உங்கள் கணவர் அல்லது மனைவி, உங்கள் பிள்ளைகள், உங்கள் நிலங்கள், உங்கள் பணம், உங்கள் சொந்த உயிரைக்கூட நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாகக் கர்த்தர்மீது அன்புகூர வேண்டும் (லூக்கா 14:26, 27, 33)! புதிய ஏற்பாட்டின்படியான கிறிஸ்தவர், "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல,*

கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்கிறார்" என்று கூறுகிறார் (கலாத்தியர் 2:20); அவர், "நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம், ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" என்று கூறுபவராக இருக்கிறார் (ரோமர் 14:8); அவர், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று கூறுகிறவராக இருக்கிறார் (பிலிப்பியர் 1:21).

இந்த விஷயங்கள் உண்மையானவையாக இருந்தால் (மற்றும் அவை அவ்வாறே உள்ளன!), கர்த்தர், செல்வந்தரான அந்த இளம் அதி காரியிடம் கேட்டதைக் காட்டிலும் குறைவாக எதையாவது உங்களிடத்தில் கேட்கிறாரா? நீங்கள் கொண்டுள்ள ஒவ்வொன்றையும் நீங்கள் விற்க வேண்டியிராமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் கொண்டுள்ள ஒவ்வொன்றையும் கிறிஸ்துவினிமித்தமாகப் பயன்படுத்த வேண்டும், நீங்கள் உங்களை உட்பட நீங்கள் வைத்துள்ள எல்லாவற்றையும் கர்த்தருக்கு அர்ப்பணிக்க வேண்டும்! அதுவே அந்த இளம் அதிகாரியிடத்தில் இயேசு கேட்டுக்கொண்ட விஷய மாகும், அதையே அவர் உங்களிடத்திலும் என்னிடத்திலும் கேட்கிறார்!

அது தீவிரமானதாக ஒலிக்கிறதா? ஆம் அவ்வாறே ஒலிக்கிறது!

ஆனால், சட்டப்படி நாம் தீவிரமானவர்கள் என்ற வகையில் நினைக்கப்பட வேண்டும் என்பதை நாம் விரும்புவதில்லை. நமது சிலுவைகள் மெத்தென்று உறையிடப்பட்டுள்ள வரைக்கும், நேர்த்தியாகப் பொருந்துகிற வரைக்கும், நவீனமானதாக இருக்கும் வரைக்கும், காலத்திற்கு ஏற்றதாக இருக்கும் வரைக்கும் மற்றும் உயர்தரமானவைகளாக இருக்கும் வரைக்கும் நாம் அவற்றைச் சுமப்போம். ஆனால் நாம் தீவிரமாக நம்மை அனுமதிக்கமாட்டோம்! நாம் ஒரு வசதியான, பழமைவாத, குற்றம் சுமத்தாத, நல்லதாக நினைக்கப்பட்ட, படகைக் குலுக்கிவிடாத மதத்தை ... தாழ்மையும் மென்மையுமான ஒரு கிறிஸ்தவத்தை ... உலகத்தை அசைக்காத ஒரு விசுவாசத்தை, ஆனால் "ஓட்டத்தோடு உருளுகிற" ஒரு கிறிஸ்தவத்தைக் கொண்டிருக்கிறோம், ஆனால் "தீவிரமானவரா"? இல்லை, உங்களுக்கு நன்றி!

வெளிவரும் ஒவ்வொரு மூச்சிலும் "கர்த்தரைத் துதியுங்கள்" என்று மக்கள் கூறுவதை நாம் கேட்கிறோம், மற்றும் "இவர்களில் ஒருவர்போல் நான் இராததற்காகத் தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்" என்று இரகசியக் குரலில் கூறுகிறோம். எல்லா இடங்களிலும், பலசரக்குக் கடைகளிலும் கூட இயேசுவுக்குச் சாட்சி கூறி, "நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?" என்று மக்களிடத்தில் கேட்கிறவர்களை நாம் காண்கிறோம், மற்றும் நாம் அஞ்சி ஒடுங்கி, "இவர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ஏளனமானவர்களாகக் காணப்பட வேண்டும்!" என்று நினைக்கிறோம். தெருக்களினூடே சென்று, கதவுகளைத் தட்டி, தங்கள் மதத்தை மக்களிடம் "விற்க" முயலுகிற மக்களை நாம் காண்கிறோம், மற்றும் "எவ்வளவு மதிகேடு! எவ்வளவு அற்பம்! எவ்வளவு அசிங்கம்! எவ்வளவு பயனற்றசெயல்! அதைச் செய்வதில் நான் பிடிபட்டுச் சாகமாட்டேன்!" என்று நினைக்கிறோம். மரித்த நிலையிலோ அல்லது வாழும் நிலையிலோ, அதைச் செய்வதில், நாம் பிடிபடுவதில்லை. பின்பு குறிப்பிட்ட சில காட்சிகளுக்குச் செல்லாத ... குறிப்பிட்ட உடைகளை அணியாத ... எந்த விஷயத்திற்காகவும் சபையைத் தவறவிடாத ... தங்களுக்கு மற்றவர்கள் தவறிழைக்கும்போது எதிர்த்துத் தாக்காத ... தேவபக்தியுள்ள மக்கள் உள்ளனர்,

*மற்றும் "எவ்வளவு தீவிரம்! நான் அது போன்று இராததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்!" என்று நாம் நினைக்கிறோம்.*

*எனது கேள்வி பின்வருமாறு: நான் இப்போது விவரித்திருக்கும் "கிறிஸ்தவத்தின் தீவிர வகையா ... அல்லது நம்மில் பெரும்பான்மையானவர்கள் நடைமுறைப்படுத்துகிற அரைமனதான, சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, வசதியான மதமா" இவற்றில் எது கிறிஸ்துவையும் தொடக்ககால சபையையும், மிகச்சிறப்பாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது? அதற்குப் பதில் அளிப்பதற்குப் பின்வரும் கருத்துக்களைச் சிந்தித்துப் பாருங்கள்: இயேசு தீவிரமானவராக இருந்தாரா? சிலுவைக்குச் செல்ல இருந்த அவருடைய மனவிருப்பானது ஒரு வசதியான சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையிலான மதமாக இருந்ததா? பவுல் தீவிரமானவராக இருந்தாரா? அவர் தமது ஊழியம் மற்றும் தமது செய்தி ஆகியவற்றைக் குறித்து மிகவும் வலிவார்ந்தவராக இருந்தபடியால், ஒருமுறை மக்கள் அவரைப் பைத்தியக்காரர் என்று குற்றம்சாட்டவில்லையா? (நடபடிகள் 26:24). தொடக்ககால சபை தீவிரமானதாக இருந்ததா? அவர்கள் "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" என்று வேதாகமம் கூறுவதில்லையா? (நடபடிகள் 17:6). செல்வந்தரான அந்த இளம் அதிகாரியிடத்தில் அவருக்குள்ள எல்லாவற்றையும் விற்றுவிடும்படி இயேசு கேட்டுக்கொண்டபோது, அது ஒரு தீவிரமான நிபந்தனையாக இருக்கவில்லையா? மற்றும் உங்களிடம் இயேசு, வேறு எதைக்காட்டிலும் தம்மை முதலிடத்தில் வைக்கும்படி கேட்கிறபோது, அது தீவிரமாக இருப்பதில்லையா? எனது விவாதத்தை நான் முடிக்கிறேன்.*

## இயேசுவின் தீவிரமான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுதல் என்பது நம்மைப் பொறுத்ததாக உள்ளது

*அந்த இளம் மனிதர் இயேசுவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. "அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்" (மத்தேயு 19:22). கர்த்தருக்கும் அவரது சபைக்கும் இது என்ன ஒரு பேரிழப்பு! அவர் எந்தவித முன்னுரிமையும் இன்றி இயேசுவுக்குத் தம்மையே ஒப்புக்கொடுக்க மனவிருப்பமாக இருந்திருந்தால், அவர் [அந்த இளம் அதிகாரி] எவ்வளவு நன்மை செய்திருக்கக் கூடும்! ஆனால் அந்த இளம் மனிதருக்கு மாபெரும் இழப்பு என்பது அவரையேதான்: அவர் தாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டிய வாய்ப்பை இழந்துபோனார் (மத்தேயு 19:21, 29), மற்றும் கர்த்தருக்குப் பிரயோஜனமாக இருக்க வேண்டிய நிலையை இழந்துபோனார். மிகமுக்கியமாக, அவர் நித்திய ஜீவனுக்குரிய சந்தர்ப்பதை இழந்துபோனார். அவர் வருத்தம் நிறைந்தவராக இருப்பதற்குக் காரணத்தை - அவர் உணர்ந்து அறிந்தவற்றைவிட அதிகமான காரணத்தைக் - கொண்டிருந்தார். இன்றைய நாட்களில் இயேசு உங்களையும் உங்களுக்குள்ள யாவற்றையும் தமக்கு ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளும்போது நீங்கள் எவ்வாறு பதில்செயல் செய்வீர்கள்? முற்றிலுமான ஒப்புக்கொடுத்தலுடன் நீங்கள் அவரிடமாய்த் திரும்புவீர்களா? அல்லது அந்த இளம் மனிதரைப்போன்று, புறம்பே சென்றுவிடுவீர்களா? அது உங்களைப் பொறுத்ததாக உள்ளது!*

# முடிவுரை

இந்தப் பாடத்தின் மூலம் நான் எதை நிறைவேற்ற நம்பிக்கையாக இருக்கிறேன்? மூன்று இலக்குகள்:

முதலாவது, இது நீங்கள் *சிந்திக்கக்* காரணமாகும் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன்: கிறிஸ்தவத்தைப் பற்றிய உங்கள் கருத்துருவாக்கத்தைப் பற்றிச் சிந்திக்க. கிறிஸ்து உங்களிடமிருந்து மிகக் கொஞ்சமானவற்றையே கேட்கிறார் என்ற கருத்தை நீங்கள் இந்த உலகத்தில் (அது இந்த உலகத்தில் இருந்து வந்ததாகவே இருக்க வேண்டும்; இது பரலோகத்தில் இருந்து வந்தது அல்ல) எங்கு பெற்றுக் கொண்டீர்கள்? கிறிஸ்தவமானது வசதியானதாக, குற்றம்சுமத்தாததாக, அறைகூவல் இல்லாததாக இருக்க வேண்டும் என்ற கருத்தை நீங்கள் எங்கே பெற்றுக்கொண்டீர்கள்? கிறிஸ்துவினுடைய மார்க்கத்தின் கேட்புகள் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

இரண்டாவது, இது நீங்கள் *உணர்வடையக்* காரணமாகும் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன் - குறிப்பாக நீங்கள் சங்கடம் உள்ளவர்களாக உணர. நீங்கள் தோழமையைக் கொண்டிருக்கும் காரணத்தால் மாத்திரம் சபைக்குச் செல்லாமல் இல்லத்திலேயே இருப்பதை என்னால் தடுத்துவிட முடியாது; ஆனால் அவ்வாறு செய்வதில் நீங்கள் சங்கடமாக உணரத் தொடங்கினால், அது சரியான திசைக்கான முதல் அடிவைப்பாக இருக்கும். ஞாயிறு இரவு ஆராதனைக்கு நீங்கள் வரத் தொடங்க நான் காரணமாக முடியாதிருக்கலாம்; ஆனால் [அவ்வேளையில்] நீங்கள் இல்லத்திலேயே தங்கியிருப்பதைச் சங்கடமாக உணரத் தொடங்கினால், அது நல்லதாக உள்ளது. ஒருவேளை நீங்கள் சங்கட மாக உணர்வது அவசியமாக இருக்கலாம்: கர்த்தருடைய சித்தத்தைச் செய்யா திருக்க உங்கள் அற்பமான சாக்குப்போக்குகளை அவர் ஏற்றுக்கொள்கிறார் என்ற கருத்தை நீங்கள் எங்கே பெற்றுக்கொண்டீர்கள்? கருத்திற்கு அதிகமானவை பின்வருமாறு: சாக்குப்போக்கு கூடச் சொல்லாமல், நீங்கள் அவரது சித்தத்தைச் செய்ய மறுக்கலாம் என்ற கருத்தை நீங்கள் எங்கே பெற்றுக்கொண்டீர்கள்?

மூன்றாவது, இது நீங்கள் *செயல்படக்* காரணமாகும் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன். ஒருவேளை நீங்கள் உங்கள் வழிகளை மாற்றுவது அவசியமாயிருக்கலாம். ஒருவேளை நீங்கள் - இப்போதில் இருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் இரவு ஊழியத்திற்கு வரத் தீர்மானித்தல் என்பது போன்ற - சிறிய விஷயங்களை கொண்டு மாத்திரம் கொண்டு தொடங்கக் கூடும். அல்லது நீங்கள் முற்றிலுமான திரும்புதலை ஏற்படுத்துவது அவசியமாக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் உங்கள் வருத்தமான நடிப்பு, வெதுவெதுப்பான நிலை, விசுவாசமற்ற வழிகள் ஆகியவற்றில் இருந்து மீளக் கட்டுவிக்கப்பட்டு, புதிய அர்ப்பணிப்புடன் கிறிஸ்துவுக்கு ஒரு புதிய ஒப்புக்கொடுத்தலுடன் மீண்டும் தொடங்க வேண்டியிருக்கலாம்.

இவ்வேளையில் உங்கள் கிறிஸ்தவத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். அது, செல்வந்தரான அந்த இளம் அதிகாரியினுடையதைப் போல் உள்ளதா? அல்லது அது “தீவிரமான” கிறிஸ்தவமாக உள்ளதா?